DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **DVC. 08/2022**
Miscellaneous : -

Deposition of **PW - 1 Witness for Prosecution (Cross continuation)**

Name : திருமதி.சர்மிளா
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age : 25

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16.03.2023.**

துவக்க நேரம் 11.18
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) திருமணம் நடந்து 2 ½ மாதங்கள் எதிர்மனுதாரர் வீட்டில் தாம்பத்ய வாழ்க்கை நடத்திவந்துள்ளேன் என்றால் சரிதான். 2 ½ மாதங்கள் கழித்து, நான் கர்ப்பமாக இருந்ததால் மயக்கமாகி கீழே விழுந்த நிலையில் என்னை, எனது கணவர் காடையாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றால் ஆமாம், எனக்கு மயக்கமாகி நான் கீழே விழுந்து என்னை எனது கணவர் மருத்துவமனையில் சேர்த்தது உண்மைதான், ஆனால் எனது கணவர் எனக்கு சரியாக உணவு கொடுக்காததால் எனக்கு மயக்கம் வந்தது.

2) காடையாம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து, மேல் சிகிச்சைக்காக, சேலம் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர் 108 ஆம்புலன்சில் என்னை அனுப்பிவைத்தார் என்றால் சரிதான்.

3) சேலம் அரசு மருத்துவமனையில் சுமார் 20 மணி நேரம் சிகிச்சைக்கு பிறகு எனது கணவர், எனது அப்பாவிற்கு தகவல் சொல்லி எனது அப்பா வந்து என்னை எனது அப்பாவின் வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்றால் எனது அப்பா, என்னை அவருடன் அழைத்து சென்றது உண்மைதான், ஆனால் நான் மருத்துவமனையிலிருந்த தகவலை எனது கணவர் சொல்லவில்லை, எனது கணவரின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள முருகன் என்பவர் எனது அப்பாவிற்கு நான் மருத்துவமனை சென்ற விபரத்தை சொல்லி, அதன்பேரில் எனது அப்பா வந்து என்னை அழைத்துச்சென்றார்.

4) எனது கணவர்தான், எனது அப்பாவிற்கு தகவல் சொல்லி, எனது அப்பா வந்து என்னை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல, முருகன் என்பவர் போன் மூலம் தகவல் சொல்லித்தான் என் அப்பா வந்து என்னை அழைத்துச்சென்றார்.

5) திருமணம் நடைபெற்று 90 நாட்கள் கழித்து, என் தகப்பனார், என் சித்தப்பா ஆகியோர் அடியாட்களை அழைத்துவந்து, எதிர்மனுதாரரின் அத்தை கண்ணம்மாளின் கணவர் சீனிவாசன் வீட்டிற்கு சென்று, அந்த தேவடியா மகன் எங்க, அவனை சொத்தை வித்து எடுத்துவர சொன்னேன், இன்னும் ஆளை காணுமே என்று எனது குடும்பத்தார் கேட்டுள்ளனர் என்றால் சீனிவாசன் என்பவரது வீட்டிற்கு எனது அப்பா, அம்மா செல்லவில்லை.

6) மேற்படி சீனிவாசனின் வீட்டில் சண்டை அதிகமாகவே எங்களது அடியாட்கள் மீது, ஓமலூர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் என்மீதுதான் பொய் புகார் கொடுத்துள்ளார்கள். நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) ஓமலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்தபொழுது, நான் விசாரணைக்கு செல்லவில்லை என்றால் என்னை விசாரணைக்கு அழைத்தது உண்மைதான், என்னால் கால் நடக்கமுடியாது என்று நான் விளக்கம் சொன்னேன், அதனால் அவர்கள் சரியென்று சொன்னார்கள்.

8) நாங்கள் செய்த குற்றத்தை மறைப்பதற்காக மறுநாள், ஆத்துார் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, எனது தந்தை புகார் கொடுத்துள்ளார் என்றால் வீட்டிற்கு வெளியே வைத்து எனக்கு சோறு போட்ட கொடுமையை நான், எனது அப்பாவிடம் சொன்னேன், எதிர்மனுதாரர்கள் குற்றம்

செய்துவிட்டு என் மீது பொய்யாக புகார் கொடுத்ததால், எனது அப்பா எதிர்மனுதாரர்களின் மீது புகார் கொடுத்தார்.

9) எனது கணவருக்கு இரண்டு வீடுகள் உள்ளது என்றாலும், ரோட்டு ஓரம் உள்ள வீட்டில் நானும், எனது கணவரும் சந்தோஷமாக குடும்பம் நடத்தினோம் என்றாலும் சரியல்ல, நாங்கள் தனியாக வசிக்கவில்லை, எனது கணவரின் பெற்றோர்களும் இரண்டு வீட்டிலும் இருந்தார்கள்.

10) என்னை வீட்டிற்கு வெளியே வைத்து சோறு போட்டதாகவும், தனி டம்ளர், தனி தட்டு வைத்து நடத்தியதாகவும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து என்னை என் அப்பா அழைத்துச்சென்றதற்கு பிறகு, 4 மாதங்கள் கழித்து என் கணவர், என் அப்பாவின் வீட்டில் வந்து, என்னுடன் 4 மாதங்கள் இருந்தார் என்றால் என் வீட்டில் இருந்தார், ஆனால் அவரை வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை.

11) என் அப்பாவின் வீட்டில், எனது கணவரை வீட்டிற்கு வெளியே வைத்து சாப்பாடு போட்டோம் என்றால் சரியல்ல. பிரசவத்திற்கு பிறகு மருத்துவ செலவுகள் அனைத்தையும் எனது கணவர்தான் கவனித்தார் என்றால் இல்லை, அவர் குழந்தை பிறப்பிற்கு வரவேயில்லை.

12) சேலம் அரசு மருத்துவமனையில், 12 நாட்கள் சிகிச்சையிலிருந்தபொழுது எனது பிரசவ செலவாக ரூ.60,000/- எனக்கு, எனது கணவர் செலவு செய்தார் என்றால் இல்லை, எனது கணவர் பொய் சொல்கிறார்.

13) என்னை, அரசு மருத்துமனையில் சேர்த்து செலவுகளையெல்லாம் எனது கணவர்தான் எனக்கு செய்தார் என்றாலும், அதனை மறைத்து நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

14) எதிர்மனுதாரர் ஒரு உடல் ஊனமுற்றவர் என்றாலும், அவர், என்னை உடல் ஊனமுற்றவர் என்று கேலி செய்ய வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல, நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன், எனது கணவருக்கு நர்சு பொண்ணைத்தான் திருமணம் செய்துவைக்க எனது மாமனார், மாமியார் எண்ணியதாகவும், எனது சொத்திற்காகத்தான் என்னை திருமணம் செய்துகொண்டதாகவும் அடிக்கடி என் மாமியார், மாமனார் சொன்னார்கள்.

15) எனது கணவர் என்னை அழைக்க என் அப்பா வீட்டிற்கு வந்தபொழுது, என் அப்பா, என் கணவரிடம் அவருக்குரிய சொத்தை பிரித்து வித்து எடுத்துவந்தால்தான் என்னை, எனது கணவருடன் அனுப்புவதாக சொன்னார் என்றால் இல்லை, நான் எனது வீட்டிற்கு ஒரே மகள், எங்கள் சொத்தே போதும், அவர்கள் சொத்தை ஏன் நாங்கள் கேட்கப்போகிறோம்.

16) எனது கணவர், மாமனார், மாமியார் மூவரும் எனது சொத்தை நான் பிரித்து எடுத்துவந்தால்தான் வீட்டிற்குள்ளே விடுவார்கள் என்று நான் சாட்சியம் அளித்திருப்பது, வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கவேண்டப்பட்டது. அனுமதி அளித்து குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 11.53

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.